## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### இரண்டாம் பருவம்

| |
|---|
| நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION) |

### ஜூலை–ஆகஸ்ட் – 2020
## P102 உரைநடையும் நாடகமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிலப்பதிகாரத்திற்கு முழுமையாக உரை எழுதியவர் யார்?
2. கம்பராமாயண முதற் செய்யுள் விருத்தி – எழுதியவர் யார்?
3. தமிழ்ச் சொல்லும் வடமொழிச் சொல்லும் கலந்து வரும் நடைக்கு என்ன பெயர்?
4. வீரமாமுனிவர் இயற்றிய தமிழ் உரைநடை நூல் எது?
5. நச்சினார்க்கினியர் உரை எழுதிய காப்பியம் எது?.
6. இராமலிங்க அடிகளார் இயற்றிய உரைநடை நூல் எது?
7. விவேக சிந்தாமணி இதழில் தொடராக வெளியான புதினம் எது ?
8. கிரேக்க நாடக ஆசிரியர்கள் எழுதிய நாடகங்கள் எத்தகையவை?.
9. எகிப்தில் தான் முதன்முதலில் நாடகம் வடிவமைக்கப்பட்டது என்றவர் யார்? .
10. கர்நாடக இசைப்பாடல் நாடக வடிவத்துக்கு என்ன பெயர்?
11. கேரள நாடக உலகைச் சரியான முறையில் புதுப்பித்தவர் யார்?

12. நாடகவியல் என்னும் நூலை இயற்றியவர் யார்?

**13.** தமிழகத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பட்ட அமெச்சூர் நாடக சபை எது?

**14.** மகேந்திரவர்மன் இயற்றிய நாடக நூல் எது?

**15.** முன்னோடியான சமூக நாடகங்களை இயற்றியவர் யார்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. 19 ஆம் நூற்றாண்டில் உரைநடை வளரக் காரணங்கள் யாவை?
2. உரைநடையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
3. வருணனையின் இரு வகைகளை விளக்குக?
4. எடுத்துரை உரைநடை என்றால் என்ன?
5. தமிழ் நாடகக் கலை வளர்ச்சியின் மூன்று நிலைகளைக் குறிப்பிடுக.
6. தமிழில் சிறுவர் நாடகங்கள் பற்றிக் குறிப்பிடுக
7. இலக்கிய நாடக வகைகள் பற்றி அறிமுகப்படுத்துக
8. கூத்து ஆசிரியர் பற்றிக் குறிப்பு வரைக

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உரைநடையின் வகைகளைக் கூறி அவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் உரைநடைக் கொள்கைகளை விவரிக்க

2. (அ) மறைமலை அடிகளாரின் உரைநடைச் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலை இயக்கத்திற்குத் தமிழ் நாடகங்களின் பங்கினை விவரிக்க

3. (அ) "மனோன்மணீயம்" நாடகம் பற்றி ஆராய்க

(அல்லது)

(ஆ) வானொலி நாடகங்கள் அமைப்பும் செயல் முறையும் பற்றிக் குறிப்பிடுக.

❋ ❋ ❋